# திருவேளுக்கை

**தூணில் தோன்றிய எந்தை !** ஸ்ரீமந் நாராயணன் மேற்கொண்ட அவதாரங்கள் பல. ஆயினும் பத்து அவதாரங்களையே முக்கிய அவதாரங்களாகக் கொண்டு 'தசாவதாரம்' என்று பெரியோர்கள் கூறி வருகிறார்கள். அவற்றுள் நரஸிம்மாவதாரத்திற்குத் தனிச்சிறப்பு உண்டு. இரணியனைக் கொல்வதற்காகப் பகவான் இந்த அவதாரத்தை மேற்கொண்டான் என்பர் பலர்; இல்லை இல்லை; தம்மிடம் அளவிலா

## ஸ்தலசயனத்துறைவார்

அன்பு கொண்ட பிரகலாதனைக் காப்பதற்காகவே இவ்வாறு அவதரித்தான் என்றும் சிலர் கூறுவர். இரண்டும் ஏற்புடையனவே! ஆனால், மூன்றாவதாகவும் ஒருண்மை புலனாகிறது! எல்லாப் பொருள்களையும் தனக்குச் சரீரமாகவும், எல்லாப் பொருள்களுக்கும் தானே ஆதாரமாகவும் இருப்பவன் ஸ்ரீமந் நாராயணன். இவ்வுண்மையை இரணியன் அறிந்திருந்தும் ஏற்க மறுத்து எதிர்த்து வந்தான். பகவானை விட தன்னை உயர்ந்தவனாக எண்ணி வந்தான். உலகிற்கு நன்மையளிக்கும் பகவானின் திருநாமங்களையே சொல்லக்கூடாது என்றான். இத்தனை வகையாகத் தம்மிடம் அபசாரப் பட்டாலும் எம்பெருமான் சிறிதும் சீற்றம் கொள்ளவில்லை. எல்லாப் பொருள்களிலும் தானிருப்பதை இவனுக்கு உணர்த்த வேண்டும் என்றே விரும்பினான்!

பிரகலாதன் சிறந்த பாகவதோத்தமன், இரணியனுக்கு மகனாக இருந்தும் எம்பெருமானிடம் பேரன்பு கொண்டிருந்தான். 'அஷ்டாக்ஷர மஹாமந்த்ரமே' தம்மை ரக்ஷிக்கும்

என்று அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன். இரணி யன் பிரகலாதனுக்குப் பல துன்பங்களைச் செய்தான். இவற் றைப் பிரகலாதாழ்வான் பொறுத்துக் கொண்டான். ஆனல், பாகவதோத்தமனிடம் இரணியன் செய்யும் அபசாரங்களை எம் பெருமானுல் பொறுத்துக் கொள்ள முடியவில்லை இதற்குரிய தண்டனை இரணியனை அழிப்பதே என்று முடிவு செய்தான். இக் காரணம் பற்றியே இரணியன் காட்டிய தூணிலிருந்து வெளிப்பட்டான்; 'கரந்தெங்கும் பரந்துளன்' என்ற உண் மையை இரணியனுக்கு உணர்த்தினுன். அவனைப் போன்ற மூர்க்கர்களுக்கும் புலப்படுத்தினுன்; உலகினுக்கே அறிவித் தான். பாகவதாபசாரத்தின் பயனை இரணியனுக்கு அளிக் கும் வகையில் அவனைக் கொன்ருன். 'தான் எங்கும் நிறைந்த பரம் பொருள்' என்பதை உணர்த்தவே பகவான் நரசிங்க மாய்த் தோன்றினுன் என்று கூறலாமன்றோ!

**சிங்கப்பிரான் உவந்த மூவிடங்கள் :** மிருகங்களில் நான் மிருகேந்திரன் (சிங்கம்) என்ருன் கீதாசார்யன். சிங்கம் காட்டில் வாழும். மலையுச்சியிலும், மலைக்குகைகளிலும் உகந்து வாழும். சோளங்கிபுரம் முதலான இடங்களில் நரஸிம்மன் மலையுச்சியில் அமர்ந்திருப்பதை ஸேவிக்கலாம். அத்திகிரி (தேவப் பெருமாள் ஸன்னிதி) சிங்கப் பெருமாள் கோயில் முதலிய இடங்களில் நரஸிம்மர் மலைக் குகைகளில் எழுந்தருளி இருக்கிருர். ஸ்ரீரங்கத்திற்கு அருகில் (வனத்தில்) எழுந்தருளி இருக்கும் அழகிய சிங்கரைக் காட்டழகிய சிங்கர் என்றே இப்போதும் கூறுகின்றனர். திருவல்லிக்கேணியைப் பிருந்தாரணியம் என்று கூறுவர். ஆதலால், இங்கும் அரணி யத்தில் (வனத்தில்) நரஸிம்மர் எழுந்தருளி இருப்பதாகவே கொள்ளவேண்டும். திருவேளுக்கை என்ற இந்த திவ்யதேச மும் வேகவதி நதிக்கரையிலுள்ள 'தும்பைவனம்' என்கிற காட்டில் இருப்பதாகவே கருத வேண்டும்.

வேள் இருக்கை என்பதே வேளுக்கை என்ருயிற்று. நரஸிம்மன் (மிகவும் விருப்பத்தோடு எழுந்தருளி இருக்கும்

இடம்) என்று பொருள். (சிங்கவேள் இருக்கும் இடம்) என்றும் பொருள் சொல்லலாம். திருமங்கையாழ்வார் அஹோபிலத்தைச் 'சிங்கவேள் குன்றம்' என்றார். நமது உடலே நரஸிம்மனின் ஸன்னிதி தான்! 'சிங்கப்பிரான் அவன் எம்மான் சேரும் திருக்கோயில் கண்டீர்!' என்றார் பெரியாழ்வார். 'ஆளரி' என்ற சொல் நரஸிம்மனையே குறிக்கும். நரஸிம்மம் என்ற திருநாமத்தின் தமிழாக்கமே ஆளரி என்பது தான்.

பயக்ருத் பயநாசந: இவ்விரு திருநாமங்களும் எம்பெருமானையே குறிக்கின்றன. அடியார்களிடம் அன்பு கொண்ட பரமன், அவர்களின் விரோதிகளுக்குப் பயத்தை அளிக்கிறான். அவர்களால் பக்தர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பயத்தை அழிக்கிறான். நாம் பயம் நீங்கி வாழ வேண்டுமாயின் நரஸிம்மனின் திருவருளைப் பெற வேண்டும். இராவணனையும் அவனைச் சேர்ந்த அரக்கர்களையும் அழித்து, அவர்களால் மகரிஷிகளுக்கு ஏற்பட்டிருந்த பயத்தை நீக்கியது ராகவஸிம்ஹம்; இரணியனை அழித்துப் பிரஹ்லாதனின் பயத்தை நீக்கியது நரஸிம்மம். வெள்ளத்தினால் அபாயத்தை அடைந்த காலத்திலும், அல்லது தண்ணீரைக் கடக்கும் காலத்திலும் வராஹப் பெருமானை நினைக்க வேண்டும்; அவனையே சரணடைய வேண்டும். பூமியில் நடந்தோ வண்டிகளிலோ பிரயாணம் செய்யும் போது வாமனாவதார எம்பெருமானை நினைக்க வேண்டும்; சரணடைய வேண்டும். பயமளிக்கும் பெருங்காட்டில் பயணம் செய்யும் போது, மிருகங்களாலும், துர்தேவதைகளாலும், பிசாச ராக்ஷஸர்களாலும் துன்பம் ஏற்படாமல் இருக்க நரஸிம்மனையே நினைக்க வேண்டும். இவர்களை அவ்வப்போது நினைத்தாலும் கேசவனை மறந்துவிடக் கூடாது: அவனே நம்மை எங்கும் ரக்ஷிக்கிறான். அவனை இடை விடாமல் நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும். இதோ! பெரியோர்கள் அடிக்கடி சொல்லும் சுலோகம் ஒன்றைக் காணீர்!

**ஜலேரக்ஷது வாராஹ: ஸ்தலே ரக்ஷது வாமந: |**
**அடவ்யாம் நாரஸிம்ஹஸ்ச ஸர்வத: பாதுகேசவ: ||**

பயநாசனன்; பயாபஹாரி என்ற திருநாமங்களைத் தாங்கிய நரஸிம்மனின் அருளில்லாமல் பயமின்றி வாழ இயலாது.

**அருள் பெறுவார் அடியார்!** கசடறக் கல்வி கற்க வேண்டும். அக் கல்வியறிவின் முதிர்ச்சி வணக்கத்தை விநயத்தைத் தர வேண்டும். ஆதலால், கல்வியினால் பெறுவது விநயம்; செல்வத்தினால் பிறர்க்கு உதவும் உளப்பாங்கைப் பெற வேண்டும். ஆனால், இவை எல்லாம் அஹங்காரத்தையே வளர்க்கின்றன. பகவானின் அருளாலும், முன் செய்த நல்வினையாலும் எல்லா வகைகளிலும் சிறந்திருப்பவனிடம் சென்று, 'நீ யாருக்கு உரியவன்' என்று கேட்டால், நான் பகவானுக்கு உரியவன்' என்று அவன் சொல்லத் துணிவது இல்லை: 'நான் எனக்கு உரியவன்' என்கிறான், 'தான் தனக்குரியன்' என்று நினைத்தவன் இரணியன். தனக்கு மேம்பட்டவன் இல்லை என்றே முடிவு செய்தான்; முடிந்து போனான்; ஆளழகிய சிங்கரே! அவனுடைய குமாரன் பிரகலாதன்! திருமந்திரத்தையே ரக்ஷகமாகக் கொண்டவன்; திருமந்திரார்த்தத்தில் ஊறியவன்! அதனால் அவன் தன்னை சேஷப் பொருளாக எண்ணினான். 'உனக்கே உரியன்' என்ற நிலையில் இருந்தான். உன் அருளால் நல் வாழ்வு பெற்று இன்றும் புகழப்படுகிறான்! உன் திருவடிகளில் அடிமைப் படாதவர்க்கு ஆவாரார் துணை!

'தான் தனக்கு உரியவன்' என்று நினைப்பவன் இரணியன் பட்டது படுவான்! 'அடியேன் தேவரீருக்கு உரியவன்' என்று நினைப்பவன் உய்ந்து போவான். ஆதலால் அழகிய சிங்கருக்கு அடியார்களாக இருக்க முற்படுங்கள் என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

**தனக்குரியனாய் அமைந்த தானவர்கோன் கெட்டான்**
**உனக்குரியனாய மைந்தன் உய்ந்தான்—நினைக்குங்கால்**
**வேளுக்கை ஆளரியே! வேறுதவியுண்டோ! உன்**
**தாளுக்கு ஆளாகாதவர்க்கு.**

நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி (77)